www.newwisdomministries.com

# ஞானஒலி





## தெய்வ பயமே துணிவு தரும்

ஞானம் 6 - ஒலி 51 - 31.12.2023

# இம்மானுவேலோடு நாமிருப்போம்





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் நம் தலைவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2023ம் ஆண்டின் இறுதி நாளாகிய டிசம்பர் 31ம் தேதியில், நாளைப் பிறக்கப் போகும் புத்தாண்டை நோக்கி நம்பிக்கையோடும், ஆவலோடும் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

2023ம் ஆண்டில் நாம் பெற்ற அனுபவத்தில், மகிழ்வான தருணங்களும், சாவாலான நிகழ்வுகளும், வெற்றிகளும், ஏமாற்றங்களும், நம்பிக்கைத் துரோகங்களும், வளர்ச்சியும், தளர்ச்சியும் நிறைந்திருக்கும். இருந்தாலும் இதுவும் கடந்து போகும் என்ற நியதி தந்த மனதைரியத்தோடு அனைத்தையும் கடந்து இந்த தலையங்கத்தைப் படிக்கும் இந்த நிமிடத்தையும் கடந்து போய்க்கொண்டு இருக்கின்றோம்.

ஓர் உண்மையை மட்டும் நாம் உறுதியாக நினைவில் கொள்வோம். கடந்த ஆண்டில் நடந்த அனைத்தும் கடந்து போய்விட்டன. ஆனால் நாம் மட்டும் காலத்தோடு தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், அனைத்து அனுபவத்தின் விளைவாக நாம் இப்போது அனைத்திலும் வளர்ந்திருக்கின்றோம், உறுதியில், அன்பில், செயல்பாட்டில், சீர்சிந்தனையில், முடிவெடுக்கும் ஆற்றலில், தெளிவில், வளர்ந்து மிகவும் ப்க்குவப்பட்டிருக்கின்றோம்.

நமக்கு வரும் துன்பங்கள், நமக்குத் தேவையானதை கற்றுக் கொடுத்தபிறகு, நாம் அதைக் கற்றுக்கொண்டபிறகு, அவை நம்மைவிட்டுப் போய்விடும் என்று சொல்வார்கள். அதன்படிதான், 2023ம் ஆண்டில் நாம் சந்தித்த பிரச்னைகள் அனைத்தும் காரண, காரியத்தோடுதான் நம்மை ஆட்டிப்படைத்தன...அச்சமயம் நாம் அந்த தருணங்களுக்காக கடவுளையும், பிறரையும் குற்றம் சாற்றியிருப்போம். ஆனால், இப்போது அவற்றின் உண்மையான சுயரூபத்தை அறிகின்றபோது... அந்தத்

தருணங்களுக்காக இறைவனுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

எல்லாம் நன்மைக்கே என்பதை நாமே உறுதியாகக் கற்றுக் கொண்டபிறகு, அந்தப் படிப்பினையை நாம் மீண்டும் அப்படிப்பட்ட துன்பங்களைச் சந்திக்கின்றபோது, நாமே நமக்குக் சொல்லிக்கொண்டு, மனநிறைவையும், நம்பிக்கையயும் பெற்றுக்கொள்கின்றோம். அதுமட்டுமல்ல, நம்மைப்போல யாராவது அப்படித் துன்பப்படும்போது, நம் அனுபவங்களைச் சொல்லி அவர்களை வழிநடத்தவும், திடப்படுத்தவும்போது நமக்கு ஆத்ம திருப்தி கிடைக்கிறது.

அத்தகைய பேரனுபவம்தான் இயேசு இம்மானுவேலாக இருந்து, நம் சிலுவைகளை அவரும் சுமந்து, நமக்கு மீட்பராக என்றும் நம்மோடு வாழ்கின்றார்.

எதற்காக நம்மை மீட்பதற்காக சிலுவை என்னும் துன்ப வழியைத் தேர்ந்துகொண்டார்? என்ற கேள்வி அனைவரின் உள்ளத்திலும் உள்ளது. நாம் அனைவரும் எந்தச் சூழலிலும் நமக்காகவும், பிறருக்காகவும் துன்பப்பட விரும்புவதில்லை. ஆகவேதான், ஏன் இயேசு துன்பத்தைத் தேர்ந்துகொண்டார் என்பதைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஏனென்றால் நாம் கடவுளர்கள் அல்ல, மாறாக அவரால் படைக்கப்பட்ட எல்லாவிதத்திலும் பெலனாய், பெலவீனர்களாய்த்தான் இருக்கின்றோம்

என் எண்ணங்கள்
உங்கள் எண்ணங்கள் அல்ல.
உங்கள் வழிமுறைகளும்
என் வழிமுறைகளும் அல்ல
என்கிறார் ஆண்டவர்.
மண்ணுலகத்திலிருந்து
விண்ணுலகம் மிக
உயர்ந்திருப்பதுபோல,
உங்கள் வழிமுறைகளைவிட,
என் வழிமுறைகளும்
உங்கள் எண்ணங்களைவிட
என் எண்ணங்களும்
மிக உயர்ந்திருக்கின்றன....
(எசாயா 55/8-9)

நாம் நமது முதிர்ச்சி, அனுபவ நிறைகுறையோடு சிந்திக்கின்றோம். அதோடு நம் தேவைகளின் அடிப்படையிலும், பாதுகாப்பின் அடிப்படையிலும்தான் சிந்திப்போம். எதை, எப்படி சிந்திக்கின்றோமோ அதன்படிதான் நமது இருப்பும், எதிர்காலமும இருக்கும்.

கடந்து ஆண்டில் நடந்த அனைத்தையும் கடந்து, மகிழ்ந்து, அழுது, திக்கித் திணறி, மேம்பட்டு, சின்னப்பட்டு, தட்டுத்தடுமாறி, எப்படியோ அனைத்தின் வழியே நடந்து, இந்த நிலைக்கு வந்திருக்கின்றோம் என்றால், அது நமது மனவுறுதி, தன்னம்பிக்கை, பிறர் உதவியால்தான்...


ஆனால் அதைவிட, மிக உயர்ந்த ஒன்றை நம் திருவிவிலியம் கூறுவதைக் கேட்போம்.....

இயேசு அவர்களைப் பார்த்து,
கடவுள்மீது
நம்பிக்கை கொள்ளுங்கள்.
உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.
எவராவது
இந்த மலையைப் பார்த்து,
பெயர்ந்து கடலில் விழு
என்று தம் உள்ளத்தில்
ஐயம் எதுவுமின்றி
நம்பிக்கையுடன் கூறினால்,
அவர் சொன்னவாறே
நடக்கும் என்றார்..- மாற்கு 11/22

அதைத்தான் இயேசு புத்தாண்டுச் செய்தியாக நமக்குத் தருகின்றார். நம்பிக்கைதானே மனித பலம். ஆற்றலால், அல்ல ஆண்டவரால் ஆகும்.

# விவிலியம் அறிவோம்





## திருப்பேரவைக்குள் நுழையும் தகுதிபெற்றவர்

இச 23:1-8 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் யார்யாரெல்லாம் ஆண்டவரின் திருப்பேரவைக்குள் நுழையலாம் அல்லது நுழையக்கூடாது என்பதை வரையறுத்துக் கூறுகின்றன. திருப்பேரவை என்ற சொல் பல சூழல்களைக் குறித்துக் காட்டுவதாக உள்ளது. இஸ்ரயேலர்களில் வயதுக் வந்த ஆண்கள் சமயச் சடங்குகளில் கலந்து கொள்வதற்கும், இஸ்ரயேல் இராணுவத்தில் பணிபுரிவதற்கும் முடிவுகளை தீர்மானிக்கக் கூடிய ஓர் அவையாக இந்தத் திருப்பேரவை இருந்தது (மீக்கா 2:5). இஸ்ரயேல் மக்களினம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினம்; எனவே உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கம் உள்ளவர்களாகச் செயல்படுவதற்கு தூய்மையுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியமாக இருந்தது. எனவேதான் தீட்டானவர்கள், அன்னியர் ஆகியோர் ஆண்டவரின் திருப்பேரவையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார்கள். விதையடிக்கப்பட்டவனும் ஆண்குறி அறுக்கப்பட்டவனும், வேசித்தனத்தால் பிறந்தவனும் பத்தாம் தலைமுறை வரைக்கும் திருப்பேரவைக்குள் நுழையலாகாது எனக் கூறப்பட்டுள்ளது. இதில் முதலில் வருகின்ற இரு பிரிவினர் இனப்பெருக்கம் செய்ய முடியாதவர்கள். மூன்றாவது பிரிவினர் தீட்டானவர்களாகக் கருதப்படுகிறவர்கள். இவர்கள் பத்தாம் தலைமுறை வரைக்கும் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். பண்டைய காலத்தில் ஒரு தலைமுறை என்பது நாற்பது ஆண்டுகள் ஆகும். எனவே பத்து தலைமுறைகள் ஒரு நீண்ட காலத்தைக் குறிக்கிறது. பண்டைய காலத்தில் வேற்று சமயத்தினரால் கொண்டாடப்படுகின்ற கருவுறுதல் சடங்குகளில் கலந்துகொண்டவர்களின் பிள்ளைகளும் ஆண்டவரின் திருப்பேரவைக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.

அம்மோனியரும் மோவாபியரும் பத்தாவது தலைமுறை வரைக்கும்

ஆண்டவரின் திருப்பேரவைக்குள் நுழையலாகாது எனக் கூறப்படுகிறது. அம்மோனியரும் மோவாபியரும் விலக்கப்படுவதற்கு முக்கிய காரணம் அவர்கள் நெருங்கிய உறவு முறையில் பிறந்தவர்கள் என்பதாகும். நெருங்கிய உறவினர்கள் நடுவில் திருமண உறவு இருக்கக்கூடாது என்ற வரையறை இஸ்ரயேலர் நடுவில் இருந்தது. இதனடிப்படையில் அம்மோனியரும் மோவாபியரும் தீட்டானவர்களாகக் கருதப்பட்டார்கள். மேலும் மோவாபு எப்போதும் இஸ்ரயேலின் பகைவனாகவே கருதப்பட்டது (1 சாமு 14:47). அம்மோனியர்கள் மோவாபியர்கள் போலல்லாமல் ஏதோமியர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. அவர்களின் சந்ததியினர் மூன்றாம் தலைமுறையிலிருந்தே ஆண்டவரின் திருப்பேரவைக்குள் நுழையலாம். ஏதோமியர்கள் யாக்கோபின் சகோதரரான ஏசாவின் வழிமரபினர். எனவே அவர்கள் நெருங்கிய உறவு முறையினர். எகிப்தியர்கள் இஸ்ரயேல் மக்களுக்குத் தஞ்சமளித்தவர்கள். இஸ்ரயேல் மக்கள் பஞ்ச காலத்தில் எகிப்தில் தஞ்சம் புகுந்து வாழ்ந்தவர்கள். ஆபிரகாம், யாக்கோபு ஆகியோர் எகிப்திற்கு அகதிகளாகக் குடிபெயர்ந்தார்கள் (தொநூ 12:10-20; 46:1-7). மேலும் பாபிலோனியர்கள் யூதாவை முற்றுகையிட்டுக் கைப்பற்றியபோது பல யூதர்களும் எகிப்திற்குச் சென்று தஞ்சம் தேடுகின்றனர் (எரே 41:11-18). இவ்வாறு இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அன்னியராய் வாழ்ந்தார்கள்; அதன் காரணமாக எகிப்தியர்களை வெறுக்க வேண்டாம் என அவர்களுக்குக் கூறப்படுகிறது.

இச 23:9-14 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் இராணுவப் பணியில் இருக்கும்போது பின்பற்ற வேண்டிய தனிமனித சுகாரதாரத்தையும், சுகாதாரத்தைக் கடைபிடிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய சடங்கு முறைகளையும் கூறுகின்றன. போருக்குச் செல்லும் வீரர்கள் தூய்மையாளவர்களாக இருக்கவேண்டும் என்பதுதான் இந்தச் சட்டங்களின் நோக்கமாக உள்ளது. இஸ்ரயேல் இராணுவத்தினர் புரியும் போர் புனிதப்போர்; ஆண்டவரின் போர். இஸ்ரயேலின் இராணுவத்துடன் ஆண்டவரும் செல்கிறார். எனவே தூயவரான ஆண்டவரின் பிரசன்னம் இருக்குமிடங்களில் வாழ்பவர்களும் தூய்மையாக இருக்கவேண்டும். உதாரணமாக, இத்தியரான உரியா போர் முனையிலிருந்து எருசலேமுக்கு வந்தபோது வீட்டிற்குச் சென்று தன் மனைவியான பத்சேபாவுடன் தங்கவில்லை; மாறாக எருசலேமில் இருந்த படை வீரர்களுடன் இரவைக் கழிக்கிறார் (2 சாமு 11:6-11). இணைச்சட்டம் நூலில் பாளையத்திற்கு வெளியே என்ற சொற்றொடர் தூய்மையற்ற இடமாகக் கருதப்படுகிறது. ஆனால் அவ்வாறு அறுதியிட்டுக் கூறமுடியாது. ஏனெனில் ஆண்டவருடைய சந்திப்புக் கூடாரமும் பாளையத்திற்கு வெளியேதான் அமைக்கப்பட்டிருந்தது (வி-ப 33:7). பாளையத்திற்கு வெளியே கழிவிடம் அமைப்பது தனிமனித சுகாதாரத்தை வலியுறுத்துவதற்காகவும், பாளையம்

தீட்டுப்படாமல் காப்பதற்காகவும் செய்யப்பட்டது எனப் புரிந்து கொள்ளலாம்.

இச 23:16-25:19 வரையுள்ள பகுதி தனித்த ஒருமைப்பாடு மற்றும் சமூக நல்லிணக்கம் பற்றிய சட்டங்களைக் கொண்டதாக உள்ளது. இப்பகுதியில் வருகின்ற சட்டங்கள் ஏழைகளைக் கவனிப்பது, சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக இருப்பவர்களுக்கு உதவுவது போன்ற கருத்துக்களை மையமாகக் கொண்டவையாக உள்ளன. இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்வில் அனுபவித்த கடவுளின் பேரிரக்கத்தை எப்போதும் மறக்கக்கூடாது. இணைச்சட்ட இறையியலில் இக்கருத்து எங்கும் எதிரொலிக்கிறது. இச 23:15-16 இறைச்சொற்றொடர்கள் தப்பியோடி அடைக்கலம் தேடும் அடிமைகளைப் பற்றிப் பேசுகிறது. வேற்றினத் தலைவர்களிடமிருந்து தப்பியோடி அடைக்கலம் தேடுபவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கவேண்டும். அவர்கள் விரும்பும் இடங்களில் அவர்களை வாழ அனுமதிக்க வேண்டும். இச்சட்டத்தின் மூலம் இரண்டு உண்மைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. முதலாவது, இஸ்ரயேல் ஆண்டவர் ஏற்படுத்திய உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருக்கவேண்டும். இஸ்ரயேலின் முன்னோர் எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இரண்டாவதாக, தப்பியோடி தஞ்சம் புகுந்த அடிமைகள் அவர்களுடைய தலைவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற சட்டம் விவிலியத்தில் எங்கும் காணப்படவில்லை; ஆனால் பண்டைய மேற்காசிய நாடுகளின் சட்டங்களின்படி தப்பியோடிய அடிமைகளும் அவர்களுக்கு உதவி செய்பவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். இஸ்ரயேல் சமூகத்தில் போரில் கைது செய்யப்பட்டவர்கள் அல்லது பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதவர்கள் அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள் (இச 15:1-18). இணைச்சட்ட விதிகள் தனித்துவம் வாய்ந்தவை. தப்பியோடிய அடிமைகள் மற்றும் பாதிக்கப்பட்ட மனிதர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; எனவே அடிமைகளைத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியமில்லை. புதிய ஏற்பாட்டில் புனித பவுல் பிலமோனுக்கு எழுதிய கடிதத்தில் ஓர் அடிமையின் தலைவனோடு, அடிமையை மனிதாபிமானத்துடன் ஏற்றுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தை நடததுவதைப் பார்க்கிறோம்.

இச 23:17-18 இறைச்சொற்றொடர்கள் புனித விபச்சாரம் (Sacred Prostitution) அல்லது வழிபாட்டு விபச்சாரம் **(cultic Prostitution)** பற்றிப் பேசுகிறது. கனானியர்களின் சமய வழிபாடுகள் இத்தகைய சடங்குகளை உள்ளடக்கியதாக இருந்தது. புனித விபச்சாரத்தினால் வருகின்ற வருமானம் கோவிலுக்குச் சொந்தமானதாகும். வழிபாட்டு விபச்சாரம் உடலுறவுச் சடங்கின் வழியாக கருவுறுதலை, நோக்கமாகக் கொண்டிருந்தது. கருவுறுவதற்கு தங்கள் கடவுளர்களின் தயவைப் பெறுவதற்காக வழிபாட்டு விபச்சாரம்

நடத்தப்பட்டது. புனித விபச்சாரத்தில் ஆண்களும் பெண்களும் அவர்களின் கோவில்களில் விளை மகனாக, விலைமகளாகச் செயல்பட்டார்கள். கோவிலில் இறைப்பிரசன்னத்தில் உடலுறவு கொள்வதை ஒரு நேர்ச்சையாகச் செய்தார்கள். இத்தகைய நேர்ச்சைகளை ஆண்டவர் அருவருப்பதாகக் கூறுகிறார். இணைச்சட்ட ஆசிரியரின் இச்சொற்றொடர்கள் வேற்று சமயப் பழக்கங்களுக்கு எதிரானவை. விலைமாதின் வாடகை, விலைமகளின் கூலிநேர்ச்சைப் பணமாக ஆண்டவரின் திருமுன்னிலைக்கு வரக்கூடாது. அது ஆண்டவருக்கு அருவருப்பானது.

இச 23:19-20 வட்டி வாங்குவதைப்பற்றிப் பேசுகிறது. இணைச்சட்ட விதிகளில் இன்றைய சமூகத்தில் நாம் காணும் ஒழுங்கு முறைகளைக் காண இயலாது; அவற்றை எதிர்பார்க்கவும் கூடாது. வட்டிக்குப் பணம் கொடுப்பது இலாபம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டது. குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சொந்த இனத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து வட்டி வாங்குவது மறுக்கப்படுகிறது;! ஆனால் வேற்றினத்தவரிமிருந்து வட்டி வாங்கலாம். சொந்த இனத்தவனிடமிருந்து வட்டி வாங்குவதைத் தடுப்பது சொந்த இனத்தானைப் பொருளாதார ரீதியாகச் சுரண்டுவதைத் தடுக்கிறது. வட்டிக்குப் பணம் அல்லது தானியங்கள் கொடுப்பது ஒருவிதமான சுரண்டல். பழைய ஏற்பாட்டு இலக்கியங்கள் பல இடங்களில் அடுத்தவரைச் சுரண்டி வாழ்வதைத் தடைசெய்கிறது (நீமொ 19:17; 28:8; விப 22:24; திபா 15:5; 37:26; எசேக் 18:7-8). கடன் கொடுப்பது அடுத்தவரைச் சுரண்டுவது அல்ல; கடன் அவருடையப் பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து அவரைக் காப்பாற்றலாம்; ஆனால் கடனுக்கு வட்டி வாங்குவது சுரண்டல்.

இச 23:21-23 இறைச்சொற்றொடர்கள் நேர்ச்சைபற்றிப் பேசுகின்றன. நேர்ச்சை என்பது ஒரு காரியத்தைச் செய்வதாகவோ, அல்லது செய்யாமல் விடுவதாகவோ கடவுளுக்கு வாக்களிப்பதாகும். நேர்ச்சை ஒருவருடைய தனிப்பட்ட மகிழ்ச்சிக்காக அல்லது ஆன்மீக வளர்ச்சிக்காகச் செய்யப்படலாம். நேர்ச்சை தனிப்பட்ட ஒன்றாகவோ அல்லது பொதுவானதாகவோ இருக்கலாம். பழைய ஏற்பாட்டில் பலவிதமான நேர்ச்சைகளைப் பார்க்கிறோம். உதாரணமாக, நாசிர்கள் தங்களைத் தனிமைப்படுத்தி, தூய்மைக்கு இட்டுச்செல்லும் ஒரு வித்தியாசமான வாழ்க்கை வாழ்வதற்கு நேர்ச்சை செய்கிறார்கள் (எண் 6:1-21). தனிமனிதர்கள் கடவுளின் ஆதரவையும் அருளையும் பெறுவதற்காகவோ, துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்காகவோ நேர்ச்சை செய்கிறார்கள் (1 சாமு 1:9-11; திபா 66:14). நேர்ச்சை பத்துக் கட்டளைகளில் வருகின்ற, உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே என்ற கட்டளையுடன் தொடர்புடையது. நேர்ச்சை கடவுளின் பெயரால் செய்யப்படுகிறது. எனவே ஒருவர்

நேர்ச்சை செய்வதாக வாக்களித்தால் அதைநிறை வேற்றவேண்டும். நேர்ச்சையை நிறைவேற்றாமல் விடுவது பாதிப்பை ஏற்படுத்தலாம்; ஏனெனில் அது ஆண்டவருக்குக் கொடுத்த வாக்கை முறிப்பதாக ஆகிறது (இச 23:23; காண். நீமொ 20:25).

இச 23:24-25 இறைச் சொற்றொடாகள் கதிர்களைக் கொய்வதுபற்றிப் பேசுகின்றன. இந்தச் சட்டம் சூழலியல் இறையியலைப் பேசுகிறது. நிலத்தின் பலன் ஆண்டவரிடமிருந்து வருகிறது; எனவே அவை எல்லா உயிர்களுக்கும் உரியது. சொத்தின் உரிமையாளர் பாதிக்கப்படாமலே ஏழைகளும், வழிப்போக்கரும் நிலத்தின் விளைச்சலிருந்து உண்ணலாம். பசியில் இருப்பவர் தனக்குத் தேவையானதை நிலத்தின் விளைச்சலிலிருந்து எடுத்து உண்ணலாம் ஆனால் எதையும் வெளியே எடுத்துச் செல்லக்கூடாது. வெளியில் எடுத்துச் செல்வது திருட்டாகிவிடும். உதாரணமாக போவாசு என்பவரின் நிலத்தில் ரூத்து கதிர்களைச் சேகரிப்பதைக் கூறலாம் (ரூத்து 2). இப்பழக்கம் விருந்தோம்பலின் ஒரு கூறாகக் கருதப்படுகிறது. இஸ்ரயேல் மக்கள் நடுவில் இது மதிப்புமிக்கதாகப் பார்க்கப்படுகிறது. இப்பகுதி இச 26 வது பிரிவை முன்மொழிவதாக உள்ளது. இச 26 வது பிரிவில் அறுவடைக்காக நன்றி கூறப்படுகிறது.

மீண்டும் சந்திப்போம்,

அருட்பணி ஆ. அலெக்ஸ் cmf






அருட்தந்தை.டேவிட் மைக்கிள்.

பங்குத் தந்தை, அந்தோயார் ஆலயம், மணலி, குழித்துறை மறைமாவட்டம்


# திருக்குடும்பப் பெருவிழா ஞாயிறு - 31.12.2023

**தொடக்க நூல் 15/1-6,21/1-3, எபிரேயர் 11/8, 11,12, 17-19, லூக்கா 2/22-40**

இன்றைய ஞாயிறை திருஅவை திருக்குடும்பப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கின்றது. இயேசுவும், மரியாவும், யோசேப்பும் வாழ்ந்த குடும்ப வாழ்வை இன்றும் உலகின் உச்சமென குடும்பத்திற்கு உதாரணமாய் உப்பரிகையில் நின்று முழங்குகின்றது. இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு குடும்பம் நடத்திய பெருமக்களை, விவிலியம் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றது. எண்ணிறந்த ஆளுமைகள் குடும்பத்தின் குலவிளக்குகளாகத் திகழ்ந்திருப்பதை விவிலியம் கோடுபோட்டுச் சொல்லுகிறது. ஆபிரகாமும், சாராவும் அவர்களில் ஒன்று உயர்ந்த உதாரணம். அவர்கள் நடத்திய குடும்ப வாழ்வை இன்றைய முதலிரண்டு வாசகங்கள் விளக்கமாய்க் கூறுகின்றன. கடவுளின் கட்டளைக்குப் பணிந்து குடும்ப வாழ்வை மேற்கொள்ளும் மாண்பை இவர்களிடம் காண்கிறோம். கடவுளால் கைக்கூடாதது எதுவுமில்லை என்பதை ஆழ்ந்துணர்ந்த இத்தம்பதி தங்களின் முதுமைப் பருவத்திலும் கடவுளின் வாக்குறுதியை நம்பி, அந்த நம்பிக்கையிலே நிலைத்திருந்தனர். கடற்கரை மணலைப்போன்றும் வானத்து விண்மீன்களைப்போலும் வாரிசுகள் வந்து சேருமென்கிற இறைவனின் வார்த்தையை சந்தேகமின்றி அந்த முதிர்பருவத்திலும் முதன்மையாகக் கொண்டு இல்லறம் நடத்திய ஆபிரகாம், சாரா தம்பதியினர் குடும்ப வாழ்விற்கு குன்றின்மீது ஏற்றி வைத்த குறைவுபடாத தீபம் போன்ற உதாரணம். நாசரேத்தில் அன்னை மரியின் மடியில் தவழ்ந்து நேர்மையாளர் யோசேப்பின் பாராமரிப்பில் வளர்ந்த இயேசு குடும்பம் என்னும் அன்பின் பாசறையில் தன்னை உள்ளடக்கிக் கொண்டார். குடும்ப வாழ்வை எப்படி அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்கு இயேசு வாழ்ந்த திருக்குடும்பமே உயர்ந்த உதாரணம். கடவுளின் குழந்தை என்றாலும், குடும்பத்தின் மதிப்பீடுகளை உலகிற்கு உரைப்பதற்காகவே, குடும்பத்திற்குள் அவர் குடிகொண்டார்.

ஆணும் பெண்ணும் இணைந்து அமைத்துள்ள மாணிக்கக் கூடாரமே குடும்பம் என்பதை மண்ணுலகத்திற்கு வலியுறுத்தவே கடவுள் தன் மகன் இயேசுவை குடும்பத்தில் பிறக்க வைத்து குடியமர்த்தினார். இதன் மூலம், குடும்பம் என்பதே கடவுளின் உருவாக்கம்தான் . அது மனிதனின் கண்டுபிடிப்பு அல்ல என்பதையும், அதன் மாண்பையும், மகத்துவத்தையும் எக்காலமும் பேணவேண்டும். அந்த உறவின் நாற்றாங்கால் எந்தச் சேதாரத்திற்கும் உள்ளாகாமல் காலமெல்லாம் காக்கப்படவேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். திருக்குடும்ப விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நாளில், நம் குடும்பங்களைத் திறனாய்வு செய்ய வேண்டிய தேவை இன்றைக்குத் தீர்க்கமாக எழுகின்றது. இறைவன் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் என்று தொடக்கத்தில் முன்மொழிந்த இயேசு தன் பணிவாழ்வில் வழிமொழிந்த காலத்தால் அழியாத அன்பின் உடன்படிக்கை



இன்று ஊனப்பட்டு உடைப்பட்டுக் கிடக்கின்ற அவலத்தைப் பார்க்கிறோம். கழுத்தில் ஆடும் கல்யாண மாலை வாடுவதற்குள் முன்பே கல்யாணங்கள் வாடிப்போகின்றன. குணவதிகளையும், குணசீலன்களையும் இணைக்கும் உறவின் பாலமான திருமணம், அதன் உள்ளீடுகளையெல்லாம் இழந்து பணம், நகை, படிப்பு, பங்களா, ஆஸ்தி, அந்தஸ்து என்று போலிச் செல்வங்களை எதிர்பார்த்து உண்மை உறவை அறுத்துவிடுகின்றன. சமூக ஊடகங்களும், தொலைக்காட்சித் தொடர்களும், குடும்ப வாழ்வின் ஒழுக்க மீறல்களுக்கு உரமிட்டு வலுசேர்க்கின்றன. திருமண வாழ்வுக்குப் புறம்பான களவுஒழுக்கம் என்று நியாயப்படுத்தப்படுகின்றன. புலன் இச்சைகளுக்கு புனித ஏற்பாடுகள் புறந்தள்ளப்படுகின்றன. நற்குணங்களை வாழ்வு முறையால், பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டிய பெற்றோர்கள், தங்களின் சுயநல இச்சைகளுக்காகத் தவறான தடங்களை ஏற்படுத்திக் கொள்கின்ற அவலம் வேதனையானது. குடும்ப வாழ்வை சீர்குலைக்கும், கருவண்டுகளை களையெடுப்போம். ஒருவனுக்கு ஒருத்தி என்கிற உயர்ந்த வேதத்தை, உன்னத வேதத்தை, உயிரைத் தந்தேனும் உயர்த்திப் பிடிப்போம். குடும்பம் என்னும் குட்டித் திருஅவை குறைவுபடாமல், காத்துக் கொள்ள முயற்சி எடுப்போம். இன்றைய தந்தைகள் யோசேப்பாகவும், தாய்மார்கள் மரியாக்களாகவும், மாறினால், பிறக்கின்ற குழந்தைகள், இயேசுக்களாக இருப்பார்கள் என்பதில் எள்முனை அளவும் சந்தேகமில்லை. நமது குடும்பங்கள் திருக்குடும்பங்களாகத் திகழட்டும்.



# இயேசு, மரியா யோசேப்பின் திருக்குடும்பம்

தொநூ. 15 : 1-6, 21 : 1-3

எபி. 11 : 8,11,12, 17-19, லூக். 2 : 22-40

31-12-2023



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

ஆண்டின் இறுதியில் திருக் குடும்பத் திருவிழா. இது புலர்கின்ற புத்தாண்டின் பூபாளம். இந்த இனிய விழா வழிபாட்டில் குடும்பத்துடன் பங்கெடுக்க வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

காலத்தின் ஓட்டத்தில், நாகரீ கத்தின் வளர்ச்சியில், பண்பாட்டு மலர்ச்சியில் மனித குலத்துக்குப் பரிசாக வாய்த்தது தான் குடும்பம். இது அன்பையும் பண்பையும் அடித் தளமாகக் கொண்டு கட்டியமைக்கப் படுகிறது. அறநெறிக் கோட்பாடுகள், ஆன்மீக வழிமுறைகள்,பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் இவற்றின் மூலம் நம்மை மனிதராய் வார்த் தெடுக்கும் கலைக்கூடம்தான் குடும்பம்.

தந்தையாம் கடவுள் வாழ்வது ஒரு தமத்திருத்துவக் குடும்பம். இயேசு வாழ்ந்தது ஒரு திருக்குடும்பம். ஆபிரகாம் - சாராள் வாழ்ந்தது ஒரு விசுவாசக் குடும்பம். இதன் அடிப்படையில் நாம் நமது குடும்பத்தைப் பற்றி சிந்திப்போம்.

சேர்ந்து வாழ்வதில் மட்டுமே சிறப்பிருக்கிறது. நாம் சேர்ந்து வாழ் கிறோமா? விட்டுக் கொடுத்தலில் மட்டுமே மகிழ்ச்சி இருக்கிறது. நாம் விட்டுக்கொடுத்து வாழ்கிறோமா? பெற்றவரைப் பேணுவதில்தான் நிம்மதி இருக்கிறது. நாம் பெற்ற வரைப் பேணுகிறோமா? என்ற கேள்விகளை நம்முன் வைத்து நம்மைச் சிந்திக்க அழைக்கிறது இன்றைய இறைவாக்கு.

ஒரு குடும்பம் சமுதாயத்தின் உயிர் நாடியாய், கிறிஸ்துவின் மறை யுடலாய், இறைநம்பிக்கையில் வாழும்போதுதான் அதுத் திருக் குடும்பமாக மாறுகிறது என்பதை இன்றைய வார்த்தை வழிபாடு வழி மொழிகிறது.

குடும்பம் என்னும் அருட் சாதனம் வழியேதான் நாம் இறைமக்களா கிறோம். இந்த அருட்சாதனம் வழியேதான் மற்றெல்லா அருட் சாதனங்களும் உருவாகின்றன. ஆபிரகாம் - சாராள், ஈசாக்கு - ரெபேக்கா, தொபியா-சாரா, செக்கரியா-எலிசபெத், மரியா - யோசேப்பு இவர்களின் குடும்பங் களைப் போன்று நற்பண்புகள் நிறைந்த குடும்பமாக நம் குடும்பம் திகழ இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

விசுவாசத்தின் தந்தையாம் ஆபிரகாம் தம் தள்ளாத வயதில் மகப்பேறு பெறுவதன் வழியாக இணையற்றக் கடவுளின் வாக்குறுதி அவரில் நிறைவேறுவதை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. ஆபிரகாம் மூலம் திருக்குடும்பத்தின் தலைவரான யோசேப்பையும் அவரது ஆழ்ந்த விசுவாசத்தையும் நினைவூட்டும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகத்தின் மூலம் ஆபிரகாம் – சாராள் இவர்களது விசுவாசம் நமக்கு முன்மாதிரியாகக் காட்டப்படுகிறது. இறை நம்பிக்கையே குடும்ப வாழ்வுக்கு அடித்தளம். ஒரு குடும்பம் இறை நம்பிக்கையில் வாழும்போதுதான் அதுத் திருக்குடும்பமாக மாறும் என்பதைச் சுட்டிக்காட்டும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) திருக்குடும்பத்தின் ஒளியாக விளங்கும் அன்பு இறைவா, தலைக் குடும்பமான தாய்த் திருச்சபைக்கும் அதன் கிளைகளான கத்தோலிக்கக் குடும்பங்களுக்கும் அரணாகவும் வழிகாட்டியாகவும் இருந்து, இறை நம்பிக்கையை மக்கள் நெஞ்சங்களில் விதைத்து, இறையரசை வளர்த்தெடுக்கும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவருக்கும் நல்ல உடல் ஆரோக்கியத்தையும், ஆன்ம பலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நசரேத்தின் திருக்குடும்பத்தை முன்மாதிரியாய்த் தந்த அன்பு இறைவா, அன்பும் அமைதியும், மகிழ்ச்சியும் சமாதானமும் ஆட்சி செய்யும் நசரேத்தின் மற்றொரு குடும்பமாக எங்களது ஒவ்வொரு குடும்பமும் திகழத் துணை செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) அன்பைப் பகிர்ந்தளிக்க வந்த அன்பு இறைவா, எங்களது பங்கில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதியும். சேர்ந்து வாழ்வதன் வழியாக, விட்டுக் கொடுத்து வாழ்வதன் மூலமாக எங்களது குடும்பங்கள் உமது திருக்குடும்பத்தின் சாயலாகவும், அதன் சாட்சிகளாகவும் விளங்க வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று வாழ்ந்து காட்டிய அற்புதக் குழந்தை இயேசுவே, எமது பங்கில் உள்ள குழந்தைகளை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் அன்பும் பண்பும் கொண்டவர்களாய், அறிவும் ஞானமும் நிறைந்தவர்களாய், கீழ்ப்படிதலையும் கற்பையும் அரணாகக் கொண்டவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# கடவுளின் தாய் புனித கன்னி மரியா மற்றும் புத்தாண்டு

எண். 6 : 22-27, கலா. 4 : 4-7, லூக். 2 : 16-21

01-01-2024

திருப்பலி முன்னுரை




பா. சேவியர்
திண்டுக்கல்


நாங்கள் பாவத்திற்கு அடிமைகள் அல்ல, கடவுளின் பிள்ளைகள் என்ற உரிமைப் பேற்றுடன் வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் கடவுளின் தாய் புனித கன்னி மரியா பெருவிழா மற்றும் புத்தாண்டு விழா வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

புலர்ந்திட்டப் புத்தாண்டை இறையன்னையின் ஆசியோடு தொடங்க தாயாம் திருச்சபை நம்மை அழைக்கிறது. தூய கன்னி மரியா இறைவனின் அன்னை என்ற சத்திய வாக்கு தான் புலர்கின்றப் புத்தாண்டின் நுழைவாயில்.

பாதுகாப்பு, அருள், அமைதி ஆகிய மூன்று ஆசிகளை புத்தாண்டுப் பரிசாக இறைவன் இன்றைய வழிபாட்டின் வழி யாக நமக்கு வழங்குகிறார். மரியாவைப்போல் தாழ்ச்சி, பொறுமை, கீழ்ப்படிதல், நம்பிக் கை, பேரன்பு, அர்ப்பணிப்பு என்ற அறுங்குணங்களை நாமும் பின்பற்றி வாழ நாம் அழைக்கப்படுகிறோம்.

காலம் இன்று மீண்டும் தன்னைத் தோவரித்துக்கொள் கிறது. புதிய ஆண்டு என்ற புத்தாடையை அணிந்து உற்சா கத்தோடுத் தன் பயணத்தைத் தொடங்குகிறது. இந்தப் பூமிப் பந்து சூரியனைச் சுற்றித் தனது அடுத்த சுற்றுப் பயணத்தைத் தொடங்குகிறது. இன்று இந்தப் புவனமே தன்னைப் புதுப்பித்துக் கொண்டு கண் விழிக்கிறது.

கடந்த கால அனுபவங்கள் கற்றுத் தந்தவை ஏராளம். அந்த அனுபவத்தின் சாரமெல் லாம் நெஞ்சில் ஆழமாய் விழுது விட, துன்பங்கள், துயரங்கள், வாட்டும் நோய்களெல்லாம் கற்பூரமாய் கரைய, இனி வரும் வாழ்க்கை கற்கண்டாய் இனிக்க, புவி ஈர்ப்பு விசை மீறி முகம் காட்டிச் சிரிக்கும் காட்டுப் பூவாய் மானுடம் மட்டுமே மேலோங்கி நிற்க, நம் கனவு கள் எல்லாம் மெய்ப்பட இத்திருப் பலி வழியாக இறை யருளை வேண்டுவோம். கரும் பான இனிப்போடும், களிப்பான நினைவோடும் புலர்கின்ற புத்தாண்டை மலர் தூவி வரவேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

மோசே வழியாக இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் வழங்கிய ஆசியுரையே இன்றைய முதல் வாசகம். இந்த சிறப்பு ஆசீரையே நம் தாய்த் திருச்சபை புத்தாண்டு பரிசாக நமக்கு வழங்குகிறது. பாதுகாப்பைக் கொடுக்கின்ற, அமைதியைத் தருகின்ற, அருளைப் பொழிகின்ற ஆண்டவரது ஆசீரைச் சுமந்துவரும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்டுமகிழ்வோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இறைத் திருமகன் இயேசுவின் பிறப்பு நமக்கும் அவருக்குமிடையே ஒரு சகோதர உறவையும், நமக்கும் கடவுளுக்குமிடையே தந்தை பிள்ளை என்ற குடும்ப உறவையும் வழங்குகிறது என்பதை பவுலடியார் இவ்வாசகத்தின் வழியே விளக்குகிறார். நாமனைவரும் கிறிஸ்துவின் உடன் பிறவா சகோதரர்கள் என்ற உயர்ந்த அந்தஸ்தை பறைசாற்றும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அருளையும் நலங்களையும் பொழிகின்ற அன்பு இறைவா, உம் திருஅவையை வழிநடத்த உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டத் திருப்பணிகளைத் திறம்பட நிறைவேற்றவும், மக்களை நேரிய வழியில் வழிநடத்தவும் அவர்களுக்குத் தேவையான ஆற்றலையும், ஆரோக்கியத்தையும், ஆன்ம பலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) ஆசி தந்து அருள் வழங்கும் அன்பு இறைவா, இப்புதிய ஆண்டில் எங்கள் குடும்பங்களில் சமாதானம் நிலவவும், அன்பும் அமைதியும் நிலைக்கவும், பகைமை நீங்கி பாசம் பொங்கவும், நோய்கள் நீங்கி நலம் பெருகவும், தீமைகள் எங்களை அணுகாதிருக்கவும், துன்பங்கள் எங்களை நெருங்காதிருக்கவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) அன்பும் கருணையும் இரக்கமும் நிறைந்த இறைவா, இப்புதிய ஆண்டைத் தந்தமைக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். இப்புதிய ஆண்டில் எங்களின் வாழ்வாதாரங்கள் வளம் பெறவும், எங்கள் குடும்பங்களில் நடைபெற வேண்டிய நல்ல காரியங்கள் எவ்விதத் தடையுமின்றி குறையுமின்றி சிறப்புடன் நடைபெறவும், பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலம் அமைந்திடவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) உண்மையின் ஊற்றாகிய இறைவா, எங்களை ஆளுகின்ற அரசியல் தலைவர்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். அவர்கள் நேர்மையாளர்களாகவும், மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாகவும் இருந்து ஆட்சி புரிய அருள் தாரும். அவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், நாட்டு மக்களின் நலனுக்காகவும் திறம்பட உழைக்க அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், அறிவையும், ஞானத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.




ஒருவரைச் சுற்றி அனைத்தும் இருளாகத் தோன்றினால்
உற்றுப் பார்த்தால், அவரே ஒளியாய் இருப்பார். – ரூமி

எதுவும் தாமதமாகிவிடவில்லை, இந்த இடத்தில் ஆரம்பித்தால்கூட
இன்னும் எவ்வளவோ உயரங்களுக்குப் போய்விட முடியும். – வண்ணதாசன்

கற்றதைக் கொண்டு சிந்திக்காதவன் வீணன்
சிந்தித்தாலும் எதையும் கற்றுக் கொள்ளாதவன்..மிகவும் ஆபத்தானவன்.
– கன்ஃபூசியஸ்

மனதிருப்தி இயற்கையான செல்வம்
ஆடம்பரம் செயற்கையான வறுமை. – சாக்ரடீஸ்

நம் நியாயங்களைச் செல்வதைவிட
நம் மௌனம் மிகவும் வலிமையானது.

வெற்றி என்பது தோல்வியின் முன்னேற்றம்.
தோல்வி அடையாத யாரும் வெற்றியாளனாக முடியாது

இலைகள் மரத்தில் தங்கிவிட முடியாது
அது உதிரும்போது பிடிப்பதற்கு மரம் கைநீட்டுவதில்லை
உதிர்ந்த இலைகள் காற்றில் பறக்கும்போது
மரம் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை.
– எஸ்.ராமகிருஷ்ணன்

பேசுவதற்கு, முட்டாள் தன் வாயைப் பயன்படுத்துவான்
புத்திசாலி தன் மூளையைப் பயன்படுத்துவான்
ஞானி தன் இதயத்தைப் பயன்படுத்துவார்.

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

# தேம்பாவணி

தேம்பாவணி மலர்கிறது..

ஈரறம் பொருத்து படலம். தீ

மணம் புரிந்து கொண்ட மாதவன் சூசையும், கன்னி விரதம் பூண்ட மரியாளும் ஈரறமும் ஓரறமாய்க் கொண்டு வாழ்ந்த சிறப்பைக் கூறும் பகுதி இது.

சுலவு உற்ற திரை யாழிசூழ் புவனம் தாங்குகின்ற
அலைவு உற்ற உயிர்க்கு எல்லாம் ஆதரவு ஆம் திருமணத்தால்
நிலவு உற்றபதத்தாலும் நீள் மலர்க் கோல் பூமானும்
உலைவு உற்ற உளத்து அஞ்சி உளைந்து இறங்கி வருந்தினரே.

பொருள்:

சுழலும் தன்மையுள்ள அலைகளை உடைய கடல் சூழ்ந்த உலகம் சுமந்து நிற்கின்ற சிற்றின்ப உணர்வால் அலையும் உயிர்களுக்கெல்லாம் ஆதரவாக அமைந்துள்ள திருமணத்தை முன்னிட்டு பிறைச் சந்திரன்மீது பொருந்திய பாதத்தை உடைய மரியாளும் குளிர்ந்த மலர்க் கோளை தாங்கிய மேலோனாகிய சூசையும் கலக்கமுற்ற தத்தம் உள்ளத்தில் அஞ்சி நொந்து இரங்கி வருந்தினர்.

முனிய அளி மொய்த்த துணர் குனிய உமிழ் தேறலினும்
கனிய இவை ஓதுதலின் இனிய இரு போதும் உறி
நனை வரும் இரண்டு பெயர் வனைவு
அரும் மணம் பெறலால்
புனைவு அரும் அனந்தம் ஊறி அனைவரும் மகிழ்ந்தனரே.



பொருள்:

சிறந்த வண்டுகள் மொய்த்த மலர்க் கொத்து குனிந்து பொழிந்த தேனைக் காட்டிலும், இனிமையாக இவற்றையெல்லாம் மக்கள் சொல்லிய வண்ணமாய், பகல் இரவென்று இருக்காலமும் இனிதே கழிய, அரும்பு போன்ற இவ்விரண்டு பேரும் அமைவதற்குரிய திருமணம் அமையப்பெற்றமையால் புனைந்துரைப்பதற்கு அரிய ஆனந்தம் அடைந்து அனைவரும் மகிழ்ந்தனர்.

அன்னை மரியாளையும், சூசையப்பரையும் ரசித்து, சுவைத்து, தியானித்து எழுதி இருக்கிறார் வீரமாமுனிவர். இத்தாலி நாட்டில் பிறந்து, வளர்ந்து தமிழ் அறியாத இவர் தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் கற்று அதுவும் புலவர்களுக்கு இணையாக செய்யுட்களைக் கற்று தம் மனதில் உள்வாங்கி பதித்து பலர் வியக்கும் வண்ணம் செய்யுள் வடிவிலேயே இறை மகன் இயேசுவை நற்செய்தியாக அறிவித்து இறைப் பணியைச் செய்த வீரமாமுனிவற்கு இணை வீரமாமுனிவரே!

மீண்டும் மலரும்..

இயேசுவுக்கே மகிமை.
லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 76

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை





அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

### குறள் விளக்கம்

அறியாதவர் அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர். ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாய் நிற்கிறது.

### சிந்தனை

எந்தவொரு நல்ல செயலை செய்வதற்கும் அன்பு அவசியம்;. நம் குழந்தைகளை உறவினரை அன்பு செய்வதனாலேயே அவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்கிறோம். அன்பு இல்லாதவர்கள் பிறருக்கு நற்செயல்கள் செய்ய இயலாது. ஆனால் வள்ளுவர் கூறுகிறார், நற்காரியங்களை செய்வதற்கு அன்பு தேவைதான். ஆனால் அதற்கு மட்டுமே தேவை என்று அறிவில்லாதவர்கள் சொல்வார்கள். ஆனால் மறத்திற்கும், அறிவற்ற செயலுக்கும், வன்முறைக்கும் கூட அன்பே காரணம் என்று குறிப்பிடுகின்றார்.

உதாரணமாகத் தாய் நாட்டை அன்பு செய்வதால் ராணுவ வீரர்கள் எதிரிகளைக் கொல்லுகின்றனர். ஒரு தாய் தன்னுடைய குழந்தையை காத்துக் கொள்வதற்காக எதிர்த்து வந்த ஒரு திருடனைத் தாக்குகின்றார். அந்த மறச்செயலுக்குக் காரணம் தன் குழந்தைமீது கொண்ட அன்புதான். இவ்வாறு வன்முறைக்கு கூட சில சமயங்களில் அன்புதான் காரணமாம் என்கிறார் வள்ளுவர்.

வேதாகமத்தில் தன் இனத்தவரை எகிப்தியர் ஒருவர் கொன்றுவிட்டான் என்பதற்காக அவனைக் கொன்று புதைத்துவிடுகிறார் மோயீசன் (விப 2:12). தன் மக்கள்மீது கொண்ட பற்றும் அன்பும்தான் காரணம். மேலும் பேதுரு ஆண்டவரைக் கைது செய்ய வந்த மனிதனைத் தன்னுடைய வாளை எடுத்து காதை வெட்டினார். இந்த வன்முறைக்குக் காரணம் ஆண்டவர் மீது கொண்ட அன்புதானே (யோவான் 18:10). ஆக வன்முறைக்கும் சில சமயங்களில் அன்பு காரணமாக இருக்கின்றது.


2024
ஞான ஒலி
இணைய இதழின்
வாசகப் பெருமக்கள்
அனைவருக்கும்
Divine
Wisdom
Ministries
சார்பாக
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்